மண்முனை மேற்கு பிரதேச சபை – 2017
மட்டக்களப்பு
---------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கு முந்திய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் திரண்ட நிதிகளும் ஒதுக்கீடுகளும் ஆக ரூபா 114,567,960 காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக இதனை ரூபா 116,068,693 ஆக முன்கொண்டுசெல்லப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 1,500,733 திரண்டநிதியானது நிதிக்கூற்றில் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல்வேறு திட்டங்களின் கீழ் ரூபா 4,624,780 கிடைக்கப்பெற்று செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது ஆக்கப்பொருள் செலவினக் கணக்குக்கு வரவு மற்றும் மூலதன மானிய கணக்குக்கு செலவு என கணக்கு வைப்பதற்கு பதிலாக வைப்புக்கணக்கினூடாக வரவும் செலவும் பதியப்பட்டிருந்தது. இந் நடவடிக்கையினால் மூலதன மானியக்கணக்கு மற்றும் ஆக்கப்பொருள் செலவுக் கணக்குகள் ரூபா 4,624,780 தொகையினால் விடுபட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான ஜே.சி.பி வாகனத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 727,200 வருமானக் கணக்கில் காட்டுவதற்கு பதிலாக வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 727,200 வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.
----------------------------------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு<br>---------------------------------------------- | இணக்கமின்மை<br>---------------- |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிக்கான ஆண்டுப் பெறுமதியை மதீப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள்<br>------------------------------------------- | ஐஜ |
| (i) அத்தியாயம் X இன்பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன்பிரிவு 197 | ஒவ்வொரு மாத முடிவிலும் நுகர்வு களஞ்சியப் பொருள் பதிவேடு செயலாளரினால் சோதனையிடப்பட்டு ஒப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>------------------------------------------- | |
| நி.பி 1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

-----------------

2.1 நிதி விளைவுகள்

----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,728,470 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,533,451 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,195,019 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

3.1 செயலாற்றல் மீளாய்வு

---------------------------

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---------------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்ம கழிவு முகாமைத்துவம்

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் மொத்தமாக ரூபா 1,972,691 செலவில் சொறுவா முனை எனும் இடத்தில் திண்ம கழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்று அமைக்கப்பட்ட போதிலும் மக்களின் எதிர்ப்பு காரணமாக அது அத்திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிலும் அதற்கு முந்திய ஆண்டுகளில் இருந்து சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் வகைப்படுத்தப்படாது கரையாக்கந்தீவு எனுமிடத்தில் உள்ள தனியார் காணியில் கொட்டப்பட்டு வருகின்றமையால் அங்குள்ள சுற்றாடலுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தியுள்ளதுடன் காட்டு மிருகங்களுக்கும் ஆபத்தினை விளைவித்து வருகின்றது.

3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மை

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது

(அ) மீளாய்வாண்டில் சபையினால் பேணப்பட்ட காசேட்டின் பிரகாரம் ஒவ்வொரு மாத இறுதியிலும் சராசரியாக ரூபா 18.6 மில்லியனுக்கு மேல் காசு மீதி கையிருப்பாக காணப்பட்டிருந்த போதும் பிரதேச மக்களின் தேவைகளை இனங்கண்டறிந்து இப் பணத்தை கொண்டு சிறந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சபை தவறியிருந்தது.

(ஆ) ரூபா 1,225,500 செலவில் 2017 திசெம்பர் 18ம் திகதியில் பிரேதம் கொண்டு செல்லும் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. பிரதேச சபை செயலாளரின் BT/MW/PS/SPS/2017 இலக்க 2017 ஜுலை 10 ஆம் திகதிய கடிதப் பிரகாரம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர்கள், சனசமுக தலைவர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துப்படி பிரேதம் கொண்டு செல்லும் வாகனம் கொள்வனவு செய்வதால் மக்களுக்கு குறைந்தளவு நன்மையே கிடைக்குமென தெரியப்படுத்தியிருந்தும் அது கவனத்தில் கொள்ளப்படாது வாகனம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததும் கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் 2018 ஏப்ரல் 12 வரையான கணக்காய்வுத் திகதியில் எதுவித பாவனையுமின்றி பிரதேச சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

3.3 மனிதவள முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் 06 ஆக காணப்பட்ட போதும் 02 பேர் மாத்திரமே 2016 ம் ஆண்டிலிருந்து கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) பிரதேச சபை எல்லைக்குள் 07 பொது நூலகங்கள் காணப்பட்ட போதிலும் நூலகர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 02 ஆகும்.ஆயினும் இப்பதவிக்கு 2017 ஜுன் 02 இல் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய நூலகர்களுக்கு நூலக உதவியாளர்களே நூலகர் பதவிக்கு சேவையாற்றி வருகின்றனர்.

3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2015 மற்றும் 2016 ம் ஆண்டுகளின் கொடுப்பனவு ஆவணங்களின் பிரகாரம் 33,607 லீற்றர் டீசல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எரிபொருள் பதிவேட்டின்படி 2015 ஆம் ஆண்டு ஜனவரி 01 இல் 708 லீற்றர் டீசல் ஆரம்ப இருப்பாகும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வாகனப் பாவனைக்கு 33,607 லீற்றர் டீசல் ரூபா 3,192,627 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது ஆயினும் வாகன ஒட்டபதிவேட்டின் பிரகாரம் குறித்த ஆண்டில் 30,470 வீற்றர் டீசல் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 டிசெம்பர் 31 இல் டீசல் கையிருப்பாக 3,845 லீற்றர்கள் இருப்பதற்கு பதிலாக 375 லீற்றர் டீசல் மாத்திரமே இருப்பாக காணப்பட்டிருந்ததன் விளைவாக ரூபா 329,650 பெறுமதியான 3,470 லீற்றர் டீசல் இழப்பு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) டெங்கு ஒழிப்பு திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்காக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 மார்ச் 30 திகதிய கடிதம் மூலம் சபைக்கென 04 ஊழியர்கள் நாளாந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு பெயர் குறிப்பிடப்பட்டிருந்தும், நியமனக் கடிதங்கள் எதுவும் வழங்காமல் சபையின் செயலாளரினால் 14 ஊழியர்கள் டெங்கு நடவடிக்கைக்காக கடமை புரிந்ததாக ரூபா 304,700 கொடுப்பனவு மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்ததுடன் இவ் ஊழியர்களின் தினவரவு பதிவேடு களவு போய்விட்டதாக விடயத்திற்கு பொறுப்பான

உத்தியோகத்தர் எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். மேலும் சபையினால் பேணப்படும் காசோலை வழங்கல் பதிவேட்டின் பிரகாரம் இவ் டெங்கு ஒழிப்பு வேலைகளுக்கான காசோலை பெற்றுக் கொண்ட சிலரின் கையொப்பமும் உறுதிசீட்டில் காணப்பட்ட கையொப்பமும் வேறுபட்டு காணப்பட்டது.

3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான EP-LE 7516 இலக்க மோட்டார் லொறி ஒன்று 2013 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்தவோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 ஒப்பந்த நிர்வாகம்

கிராமப் பிரதேசங்களில் 1000 கி.மீ நீளமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பாக 2017 மார்ச் 24 ஆம் திகதிய உள்ளூராட்சி வழிகாட்டல் 03/2017 இன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது அளவு மற்றும் கணிப்பீடுகளின் உண்மைத் தன்மை தொடர்பாக உள்ளூராட்சி பொறியியலாளரின் அனுமதி கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தும், இதனைக் கருத்தில் கொள்ளாமல் மீளாய்வாண்டில் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்த 05 கொங்கிறீட் வீதிகள் அமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் யாவும் கணியங்கள் எதுவும் மாற்றமின்றி ஒரே மாதிரியாக தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உரிய இடங்களுக்கு சென்று பார்வையிட்டு உள்ளபடியான மதிப்பீடாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை வெளிக்காட்டுகிறது.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான ஐந்து வகையான வருமான மூலங்கங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 6,045,000 வருமானங்களுக்கும், அறவீடுசெய்யப்பட்ட ரூபா 1,100,160 வருமானங்களுக்குமிடையே 39% தொடக்கம் 99%வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது பாதீடு தயாரிக்கும் போது உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை காட்டுகின்றது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளதுவரையாக முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) பாதீடு தயாரித்தல் | பாதீடு தயாரிக்கப்படும் போது உரிய விடயங்கள் பகுப்பாய்வு செய்தல் மற்றும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) வருமான முகாமைத்துவம் | வருமான மூலங்களை கண்டறிந்து வருமானங்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |